## நீதித்துறை

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலத்தில் மக்ஹ்ஜ்ஸூமி குலத்துப் பெண் மணி ஒருவர் ஒன்றைத் திருடிவிட்ட நிலையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் அவளுடைய கையைத் துண்டித்துவிடுமாறு கட்டளையிட்டார்கள். நபி மொழியில் கூறப்பட்டுள்ளது:

**أَنَّ قُرَيْشًا أَهَمَّهُمْ شَأْنُ المَرْأَةِ المَخْزُومِيَّةِ الَّتِي سَرَقَتْ، فَقَالُوا: وَمَنْ يُكَلِّمُ فِيهَا رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ؟ فَقَالُوا:وَمَنْ يَجْتَرِئُ عَلَيْهِ إِلَّا أُسَامَةُ بْنُ زَيْدٍ، حِبُّ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَكَلَّمَهُ أُسَامَةُ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: " أَتَشْفَعُ فِي حَدٍّ مِنْ حُدُودِ اللَّهِ، ثُمَّ قَامَ فَاخْتَطَبَ، ثُمَّ قَالَ: إِنَّمَا أَهْلَكَ الَّذِينَ قَبْلَكُمْ، أَنَّهُمْ كَانُوا إِذَا سَرَقَ فِيهِمُ الشَّرِيفُ تَرَكُوهُ، وَإِذَا سَرَقَ فِيهِمُ الضَّعِيفُ أَقَامُوا عَلَيْهِ الحَدَّ، وَايْمُ اللَّهِ لَوْ أَنَّ فَاطِمَةَ بِنْتَ مُحَمَّدٍ سَرَقَتْ لَقَطَعْتُ يَدَهَا** البخاري،مسلم )

*பொருள்: மக்ஹ்ஜ்ஸூமி குலத்துப் பெண் திருடிய குற்றத்திற்காக அவளைப் பற்றி ஃகுரைஷிகள் ஆலோசனை கலந்தனர் மற்றும் அவளைப்பற்றி இறைத் தூதர் ﷺ அவர்களிடம் பேசும் தைரியமுடையவர் யார் என்ற கேள்வி எழுப் பினர். பின்பு கூறினார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மிகப்பிரிய மானவரான ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களைத்தவிர வேறு யாராலும் இதனை செய்யமுடியாது. ஹஜ்தை் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களும் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அப்பெண்ணைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீர் அல்லாஹ் நிர்ணயித்த சட்டங்களில் ஒன்றைப்பற்றி என்னிடமே சிபாரிசு செய்கிறீரா? அதன்பின், அவர்கள் ﷺ க்ஹுத்பா உரை நிகழ்த்தினார்கள், மேலும் கூறி னார்கள், மக்களே, உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அவர்களில் கண்ணிய மிக்கக் குலத்தைச் சேர்ந்த ஒருவர் ஒன்றைத் திருடிவிட்டு சட்டத்திற்கு முன் கொண்டுவரப்பட்டால், அவரை விட்டுவிடுவார்கள். ஆனால், அவர்களில் வலிமையற்றவர்கள் திருடினால் அவர்களுக்கு தண்டனை அளிக்கப்படும். இதன் காரணமாகவே, அவர்கள் அழிக்கப்பட்டும் உள்ளார்கள். அல்லாஹ் வின்மீது சத்தியமாக. முஹம்மதின் ﷺ மகள் ஃபாதிமா (ர) திருடும் குற்றத் தினைச் செய்திருந்தாலும், நான் நிச்சயம் அவர்களுடைய கையையும் வெட்டிவிடும்படி ஆணையிட்டிருப்பேன் (புக்ஹாரி, முஃஸ்லிம்).*

இவ்வகையில், இறைத்தூதர் ﷺ அவர்கள் நீதி மற்றும் நியாயத்தை நிலை நாட்டுவதற்கான ஒரு முன்மாதிரியான உதாரணத்தை ஏற்படுத்தியுள்ளார் கள் மற்றும் பரிந்துரைத்து சிபாரிசுசெய்தல், செல்வாக்கினைப் பயன்படுத்து

www.uzaifalahi.com

வது மற்றும் நீதி நிலைநாட்டப்படுவதில் தலையீடு ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்கள். நீதியை நிலைநாட்டுவதற்காக இஸ்லாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எந்த அளவிற்கு இருந்தன என்றால், அநீதியிழைக்கக்கூடாதென மக்களை அச்சுறுத்தியுள்ளதோடு, அநீதி மற்றும் கொடுமைகளை இழைப்பது மறுமை நாளின் இருள்களாகவும் கருதியுள்ளது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

اتَّقُوْا الظُّلْمَ، فَإِنَّ الظُّلْمَ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ (مسلم)

பொருள்: *அநீதியிழைப்பதிலிருந்து விலகியிருங்கள், ஏனெனில், அநீதியாளர்களுக்காக மறுமையில் இருள்கள் சூழ்ந்துகொள்ளக் காத்திருக்கின்றன (முஸ்லிம்).*

## ஆட்சி மற்றும் நீதித்துறைகளுக்கிடையிலான வித்தியாசம்

ஆட்சி வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் ஒன்றாகக் கொண்டதாகும். இதன் மூலம்தான் ஒரு ஆட்சியாளர் மக்களுக்கிடையே நியாயத்தை நிலைநாட்டுகின்றார். இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களான ஷரீஅத் அடிப்படையிலான கட்டளைகளுக்கேற்ப நீதித்துறை மக்களுக்கிடையிலான விவாதங்கள் மற்றும் பிரச்சினைகளில் தன்னுடைய தீர்ப்பினை வழங்குகின்றது. இதன் பொருள் என்னவென்றால், விவாதங்கள் மற்றும் பிரச்சினைகள் எழும்போது நிதித்துறையின் பணி துவங்குகின்றது அல்லது ஒருவர் தன்னையே சட்டத்திற்கு அப்பாற்பட்டவராகக் கருதிக்கொண்டு ஒரு குற்றத்தைப் புரிந்துவிட்டால் அவர் ஃகாஜ்தி (நீதிபதி)க்கு முன்பு கொண்டுவரப்பட்டு, அவருக்கு எதிராக ஷரீஅத் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பு கூறப்படும், அத்துடன் அந்த நீதிபதியின் தீர்ப்பினை அரசு செயல்படுத்தும்.

www.uzairfalahi.com

## ஃபத்வா மற்றும் நீதித்துறை

ஃபத்வா என்பது நீதிமன்றத்தீர்ப்போடு ஒப்பிடும்போது ஒரு சாதாரண வழிமுறையாகும். ஏனெனில், இதற்கான எந்த ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையும் எடுக்கத்தேவையில்லை, மாறாக, ஒரு பிரச்சினையைபபற்றி அறிய விரும்பும் ஒருவர் ஒரு அறிஞரிடம் சென்று இதனைக்கேட்கவேண்டும் அல்லது தற்காலத்தில் தொழில்நுட்ப அடிப்படையிலான ஒரு சாதனத்தைப் பயன்படுத்தி அந்த அறிஞரிடம் அந்தக் கேள்வியை அனுப்பினால்போதும். அந்த அறிஞர் அதற்கான பதிலையும் கொடுத்துவிடுவார். ஃகாஜ்தி (நீதிபதி)யிடம் இவ்வாறான கேள்விகளைக் கேட்கக்கூடாது, அவர் வணக்க வழிபாட்டு விஷயங்களைப்பற்றி எந்த ஃபத்வாவும் கொடுக்கவும் மாட்டார். முஃப்தி என்பவர் அனைத்து வகையான கேள்விகளுக்கும் பதில்

களைக் கொடுப்பதோடு மக்களுக்கு அறிவுரைகளை வழங்கி அவர்களுக்கு வழிகாட்டுதல்களையும் வழங்கி நேர்வழியில் நடந்துகொள்ளவும் அறிவுறுத்துவார். ஆனால், ஒரு முஃப்தியானர் ஒரு நிதிபதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரதைப்போன்று எந்த அதிகாரமும் பெறுவதில்லை.

**நீதித்துறை**

இஸ்லாமிய ஆட்சியில் பல்வேறு துறைகள் இடம்பெறும், நீதியை நிலை நாட்டுவதிலும் மக்களுக்கு இஸ்லாமியச் சட்டங்கள் மற்றும் ஒழுக்கங்களைப் பின்பற்றி நடக்கும் வகையில் வழிநடத்தவும் நீதித்துறை இந்தத் துறைகளில் மிகவும் முக்கியமான ஒறு பகுதியாகும். இஸ்லாம் ஒரு தனித்தன்மை வாய்ந்த நீதியினை நிலைநாட்டும் முறையினை அளித்துள்ளது, உலக வரலாற்றிலேயே இதனைப்போன்ற ஒரு உதாரணம் இருக்கவில்லை. இந்த நீதித்துறையின் பல்வேறு பிரிவுகள் உள்ளன, உதாரணமாக, நீதி மன்றங்கள், காவல்துறை, இஹ்திசாப் எனப்படும் சட்டத்திற்குமுன் பதில் கூற வேண்டிய கட்டாயம் (Accountability System). இந்த அமைப்பு இஸ்லாமிய ஆட்சியில் மக்களுடைய வாழ்க்கையின் கொடுக்கல் வாங்கல்களில் ஒழுக்க முறையினைக் கண்காணிக்கும் ஏற்பாடாகும், உதாரணமாக, குற்றவியல் துறை ஆகியன.

www.uzairfalahi.com

**இஸ்லாத்தில் நீதித்துறையின் வரலாறு**

இறைத்தூதர் ﷺ அவர்கள் இஸ்லாமிய அரசமைப்பின் முதன்முதலான ஆட்சியாளராவார் மற்றும் முதன் முதலான தலைமை நீதிபதியாகவும் இருந்தார்கள். அல்லாஹ் தஆலா அவர்களுக்குக் ﷺ கட்டளையிட்டிருந்தான்:

وَأَنِ ٱحۡكُم بَيۡنَهُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ وَلَا تَتَّبِعۡ أَهۡوَآءَهُمۡ وَٱحۡذَرۡهُمۡ أَن يَفۡتِنُوكَ عَنۢ بَعۡضِ مَآ أَنزَلَ ٱللَّهُ إِلَيۡكَۖ

﴿٤٩﴾ المائد 49)

*பொருள்: எனவே (நபியே), அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப அவர்களுடைய விவகாரங்களில் திர்ப்பளியுங்கள், அவர்களுடைய ஆசாபாசங்களைப் பின்பற்றாதீர்கள், அவர்கள் உம்மைக் குழப்பத்திலாழ்த்தி அல்லாஹ் உம்மீது இறக்கியருளிய அறிவுரைகள் சிலவற்றிலிருந்து உம்மை இம்மியளவும் நழுவச் செய்திடாவண்ணம் நீர் அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பீராக (அல் மாயிதா:49)*

*திருக்ஃகுர்ஆனில் மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

إِنَّآ أَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ لِتَحۡكُمَ بَيۡنَ ٱلنَّاسِ بِمَآ أَرَىٰكَ ٱللَّهُۚ وَلَا تَكُن لِّلۡخَآئِنِينَ خَصِيمٗا ١٠٥

( النسا .05 )

*பொருள்: (நபியே) அல்லாஹ் உமக்கு அறிவித்திருந்த நேரிய வழியின்படி மக்களிடையே தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதற்காகவே உம்மீது இத்திரு மறையை சத்தியத்துடன் நாம் இறக்கி வைத்தோம், நீர் நம்பிக்கை துரோகம் செய்பவர்களுக்கு வாதாடுபவராய் இருக்கவேண்டாம் (அந் நிசா:105)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் தங்களுடைய தூதர்களான (ஆளுநர்களை) நீதிபதிகளாக நியமித்து தூரமானப் பிரதேசங்களுக்கு அனுப்புவார்கள். ஹஜ்ரத் முஃஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்களை எமன் நாட்டு நீதிபதியாகவும், ஃஅதாப் பின் உசைத் (ர) அவர்களை மக்காஹ்வின் நீதிபதியாகவும் நியமித்து அனுப்பிவைத்தார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் நீதிபதிகளை அனுப்பி வைப்பதற்கு முன்பாக அவர்களுக்கு அறிவுரைகளையும் அறிவுறுத்தல் களையும் வழங்குவார்கள். அவர்கள் ﷺ ஒரு முறை ஹஜ்ரத் அலி பின் அபீ தாலிப் (ர) அவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் கூறினார்கள்:*

**يَا عَلِيُّ،إِذَا جَلَسَ إِلَيْكَ الْخَصْمَانِ فَلا تَقْضِ بَيْنَهُمَا حَتَّى تَسْمَعَ مِنَ الْآخَرِ كَمَا سَمِعْتَ مِنَ الْأَوَّلِ فَإِنَّكَ إِذَا فَعَلْتَ ذَلِكَ تَبَيَّنَ لَكَ الْقَضَاءُ** أحمد، أبو داؤد، الترمذي )

*பொருள்: அலி அவர்களே (ர), உங்களிடம் இரு வாதிகள் வருவார்களேயானால் நீங்கள் ஒருவருடைய வாதத்தைக்கேட்டு உங்கள் தீர்ப்பினனை வழங்கிவிடக்கூடாது, மாறாக, நீங்கள் இருவர்களுடைய வாதத்தையும் கேட்க வேண்டும். இவ்வகையில், நீங்கள் ஒன்றில் தீர்ப்பு அளிப்பது எளிதானதாக ஆகிவிடும் (அஹ்மத், அபூ தாவூத், திர்மிதி)*

* * *

www.uzairfalahi.com